

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 175 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 22 – செவ்வாய்க்கிழமை 04 பிப்ரவரி 2025 – வெளியீர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 175 : Thiruvalluvar Year - 2056 - Thai 22 - Tuesday 04 February 2025 - Dak 12 Pages ₹ 5.00




கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (3.2.2025) பேரறிஞர் அண்ணா அவர்களின் 56–வது நினைவு நாளையொட்டி, சென்னை வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடம் வரை அமைதிப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில், கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், இந்நாள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## காஞ்சி தந்த காவியத் தலைவர்

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி!

## முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் துரைமுருகன் – டி.ஆர்.பாலு உள்ளிட்ட பல்லாயிரவர் பங்கேற்பு!

**சென்னை, பிப்.4-**

**பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளையொட்டி, முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று சென்னையில் மாபெரும் அமைதிப் பேரணி நடைபெற்றது. சென்னை வாலாஜா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலையில் இருந்து புறப்பட்ட இந்த அமைதிப் பேரணி அண்ணா நினைவிடத்தை அடைந்தது. அங்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.**

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவு நாள் நேற்று! திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்து, தமிழ்நாட்டின் நலனை, தமிழ் மொழியின் சிறப்பினை போற்றிடும் வகையில் தன் வாழ் நாளெல்லாம் தன்னை ஒப்படைத்த பிதாமகன்! 'இந்தி'த் திணிப்பின்போது உறுதியுடன் எதிர்த்து தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு போர்க் கவசமாக திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா! இன்றைக்கும் 'இந்தி' மொழியை திணிக்க ஒன்றிய அரசு பல வழிகளில் முயற்சித்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை உறுதி ஒவ்வொரு தமிழனின் குருதியிலும் கலந்திருக்கிறது.

அவரது கொள்கை வழியில் ஆட்சி நடத்தும் திராவிட மாடல் அரசின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் மொழிக் காக்க அண்ணா அவர்களின் கொள்கை வழி நின்று அவரது போர்க் கவசத்தை அணிந்து இன்று தமிழ்நாட்டில் 'இந்தி' நுழையாமல் பேணி காத்து வருகிறார் என்பது நாமெல்லாம் அறிந்த ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் மனிதநேயத்தை, போதித்தவர். தமிழ்மொழியைக் காத்த பெருமகனார், தமிழ் நாடு என்று பெயர் சூட்ட முழுமுதல் காரணமாக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாள் நேற்று!

அவரது நினைவு நாளையொட்டி அண்ணாவின் கொள்கை வீரர் திராவிட மாடல் அரசின் நாயகர், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாபெரும் அமைதி பேரணி சென்னையில் நடைபெற்றது.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.2.2025) பேரறிஞர் அண்ணா அவர்களின் 56–வது நினைவு நாளையொட்டி சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தலைமைக் கழக நிர்வாகிகள், இந்நாள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

அந்த அமைதி பேரணி நிறைவில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

காஞ்சி தந்த காவியத் தலைவர் – உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதைச் சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - **பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளினையொட்டி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் நேற்று (பிப்ரவரி - 3, திங்கட்கிழமை) காலை 7.00 மணிக்கு காமராசர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடைந்தது.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இப்பேரணியில் கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் - மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.எஸ்.இராஜ கண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, சிவ.வீ.மெய்யநாதன், கயல்விழி செல்வராஜ், அரசு கொறடா கா.ராமச்சந்திரன், கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மேயர் பிரியாராஜன், மாவட்டச் செயலாளர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி, வி.ஜி.ராஜேந்திரன், காரம்பாக்கம் க.கணபதி, அ.வெற்றியழகன், ப.தாயகம் கவி, இ.பரந்தாமன், ஜோசப் சாமுவேல், அரவிந்த் ரமேஷ், ஜே.ஜே.எபினேசர், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப. ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல், பகுதிச் செயலாளர் எஸ்.மதன் மோகன் மற்றும் சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் கழக இந்நாள் – முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் – முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்று அண்ணா அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்தினர்.